DINAMALAR

11 MAY 2022

PAGE 4

# உயர் கல்வி தரவரிசையில் புதுச்சேரி பல்கலை., முன்னேற்றம்

**புதுச்சேரி, மே 11–** டைம்ஸ் உயர் கல்வி தரவரிசையில், புதுச்சேரி பல்கலைக்கழகம் முன்னேறியுள்ளது.

பல்கலை., உதவி பதிவாளர் மகேஷ் வெளியிடுள்ள செய்திக்குறிப்பு:

உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக தரவரிசையின் வெளியீட்டாளரான டைம்ஸ், உயர் கல்வி, ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகள் தொடர்பான பல்கலைக் கழகங்களின் மதிப்பீடு தரவரிசை பட்டியல் – 2022ஐ வெளியிட்டது.

அதில், 110க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 1524 பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன. 64 இந்திய பல்கலைக்கழகங்கள் இதில் இடம் பிடித்துள்ளன.

இதில் புதுச்சேரி பல்கலைக் கழகம் 601 – 800வது இடத்தில் உள்ளது. முந்தைய ஆண்டில் பெற்ற மதிப்பெண் 47.6 – 56.5ஐ காட்டிலும் 57.3– 64 மதிப்பெண்களுடன் கணிசமாக மேம்பாடு அடைந்துள்ளது.

நிலையான வளர்ச்சி இலக்குகள் தரவரிசை 2022ன் படி, புதுச்சேரி பல்கலைக்கழகம் பருவநிலை நடவடிக்கை, தண்ணீருக்கு கீழே வாழ்க்கை, நிலத்தில் வாழ்க்கை, தரமான கல்வி ஆகிய குறியீட்டில் 201 –300 தரவரிசையுடன், பல இந்தியப் பல்கலைக் கழகங்களை விட கணிசமாக முன்னேறியுள்ளது.

இது தவிர, அடல் இன்னோவேஷன் தரவரிசை, அவுட்லுக் தரவரிசையில் புதுச்சேரி பல்கலை., கணிசமான மதிப்பெண் பெற்றுள்ளது.

இதற்கு பங்காற்றிய, ஆசிரியர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களை துணை வேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்

MAALAI MALAR

11 MAY 2022

PAGE 3

உயர்கல்வி தரவரிசையில்

# புதுவை பல்கலைக் கழகம் முன்னேற்றம்

புதுச்சேரி, மே 11—

புதுவை பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக தரவரிசையின் வெளியீட்டாளரான டைம்ஸ், உயர்கல்வி, ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகள் தொடர்பாக பல்கலைக் கழகங்களின் மதிப்பீடு தரவரிசை பட்டியல் 2022—ஐ வெளியிட்டது.

இதில் 110—க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து ஆயிரத்து 524 பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றன. 64 இந்திய பல்கலைக் கழகங்கள் இடம்பெற்றன. இதில் புதுவை பல்கலைக்கழகம் 601—800—வது இடத்தில் உள்ளது.

முந்தைய ஆண்டில் பெற்ற மதிப்பெண் 47.6—56.5—ஐ காட்டிலும் 57.3—64 மதிப்பெண்களுடன் கணிசமாக மேம்பாடு அடைந்துள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகள் தரவரிசை 2022—ன்படி புதுவை பல்கலைக்கழகம் பருவநிலை நடவடிக்கை, தண்ணீருக்கு கீழே வாழ்க்கை, நிலத்தில் வாழ்க்கை, தரமான கல்வி ஆகிய குறியீட்டில் 201—300 தரவரிசையுடன் பல இந்திய பல்கலைக்கழகங்களை விட கணிசமாக முன்னேறியுள்ளது. இதுதவிர அடல் இன்னோவேஷன் தரவரிசை, அவுட்லுக் தரவரிசையில் கணிசமான மதிப்பெண் பெற்றுள்ளது. இதற்கு பங்காற்றிய ஆசிரியர்கள், அலுவலர்கள், ஊழியர்கள், மாணவர்களை துணைவேந்தர் குர்மீத்சிங் பாராட்டினார்.